# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2020

ஆண்டு: 6 திகதி: 21.11.2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. தேவரதி குலராஜா

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 30 | |
| வினா 2 | 12 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 8 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 30 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**1.1 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

## நெருப்பு

நெருப்பின் மறுபெயர்கள் அக்கினி, தீ என்பனவாகும். ஐம்பூதங்களில் நெருப்பும் ஒன்றாகும். நெருப்பு எரிவதற்கு ஒட்சிசன் என்ற வாயு பயன்படும். ஆக்கவும், அழிக்கவும் நெருப்பு உதவுகிறது. "நெருப்பு இல்லாமல் புகை வராது" என்பது பழமொழி. வளங்களுள் ஒன்றான நெருப்பு உலகிற்கு ஒளியையும், வெப்பத்தையும் கொடுக்கிறது. சூரியன் ஒரு தீப்பிளம்பாகும். அது உலகிற்கு ஒளியையும், வெப்பத்தையும் கொடுக்கிறது. ஆதி மனிதன் ஒரு கல்லுடன் இன்னொரு கல்லை உரசி அல்லது ஒரு தடியுடன் இன்னொரு தடியை உரசி நெருப்பை ஏற்படுத்தினான். தீக்குச்சியைக் கொண்டு நாம் தீயை ஏற்படுத்தலாம்.

உணவு சமைப்பதற்கு நாம் மின்சாரம், பெற்றோலிய வாயு, மண்ணெண்ணை, விறகு முதலியவற்றை உபயோகிக்கிறோம். போர் செய்யும் போது அணுகுண்டின் மூலம் ஒரு இடம் எரிந்து அழிவதை நாம் காணலாம். நெருப்பை நாம் ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்துவது சிறந்தது.

1) நெருப்பு எரிவதற்கு பயன்படும் வாயு எது?

_______________________________________________

2) நெருப்பு உலகிற்கு அளிப்பவை எவை?

_______________________________________________

_______________________________________________

3) எமக்கு ஒளியையும் வெப்பத்தையும் அளிக்கும் தீப்பிளம்பு எது?

_______________________________________________

4) ஆதி மனிதன் எவ்வாறு நெருப்பை உண்டாக்கினான்?

_______________________________________________

_______________________________________________

5) நாம் சமைப்பதற்கு உபயோகிக்கும் எரிபொருட்கள் இரண்டு தருக?

_______________________________________________

_______________________________________________

6) இப்பகுதியில் நெருப்பைப் பற்றி வந்த பழமொழி என்ன?

_______________________________________________

7) அணுகுண்டு எதற்குப் பயன்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

(7x2=14 புள்ளிகள்)

**1.2 பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

1) நெருப்பு நன்றாக எரிவதற்கு தேவையானது:
(புகை, வெளிச்சம், ஒட்சிசன்)

2) நெருப்பின் மறு பெயர்:
(வெப்பம், அக்கினி, சூடு)

3) இரு கற்களை அல்லது தடிகளை உரசி நெருப்பை உண்டாக்கியவர்கள்:
(மிருகங்கள், ஆதிமனிதர், பறவைகள்)

4) உலகிற்கு வெப்பத்தையும் ஒளியையும் அளிப்பது:
(சூரியன், சந்திரன், நட்சத்திரம்)

(4x1=4 புள்ளிகள்)

**1.3 எதிர்ச் சொல்லின் கீழ் கோடிடுக.**

1) சூரியன் உலகிற்கு ஒளியைப் பரப்புகிறது,
ஒளி என்பதன் எதிர்ச் சொல்:
(வெளிச்சம், ஒலி, இருள்)

2) சூரியன் ஒளியையும் வெப்பத்தையும் தருகிறது,
வெப்பம் என்பதன் எதிர்ச் சொல்:
(வெய்யில், குளிர், சூடு)

3) மூடிய பாத்திரத்தில் உள்ள நெருப்பு அணைந்து போகும்,
அணைதல் என்பதன் எதிர்ச் சொல்:
(அழித்தல், எரிதல், மூடுதல்)

4) சூரியன் வெளிச்சம் கொடுக்கும்,
வெளிச்சம் என்பதன் எதிர்ச் சொல்:
(இருள், மழை, சூடு)

(4x1=4 புள்ளிகள்)

## 1.4 Translation

1) Production and destruction can be caused by fire.

___

___

2) The Sun gives light and heat to the earth.

___

___

3) The Sun is a ball of fire.

___

___

4) A place is destroyed by bomb in war time.

___

___

(4x2=8 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 12 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்.**

1) **மடி**

பெயர்

_______________________________________________

வினை

_______________________________________________

2) **ஊர்**

பெயர்

_______________________________________________

வினை

_______________________________________________

3) **தை**

பெயர்

_______________________________________________

வினை

_______________________________________________

(3x4=12 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**தொடக்கப்பட்ட கதையை 50 சொற்களுக்கு குறையாது எழுதி முடியுங்கள்.**

எமது வகுப்பு மாணவர்கள் கல்விச்சுற்றுலா செல்வதாக வகுப்பாசிரியர் அறிவித்த நாள் முதல் நானும் வகுப்பு நண்பர்களும் அந்தநாளை ஆவலுடன் எதிர்பார்த்தோம். நாளும் வந்தது, ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலை மைதானத்தில் கூடினோம். பெற்றோரும் வழியனுப்ப வந்திருந்தனர். கடல்வாழ் உயிரினங்கள் வாழும் காட்சிச்சாலைக்கு செல்லப்போகிறோம். நாங்கள் இருவர் இருவராக வரிசையில் நிற்க பேரூந்து வண்டியும் வந்து நின்றது...............

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**உமது தமிழ்பாடசாலையின் இயங்கலைக் கல்வியைப் பற்றி உமது தாய் நாட்டில் இருக்கும் உறவினருக்கு 50 சொற்களுக்கு குறையாது கடிதம் எழுதுக.**

| வினா இல | 5 | புள்ளிகள் | 8 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**விடை தருக.**

1) மிருகம் என்பதன் ஒத்த சொல் என்ன?

2) தூக்கம் என்பதன் ஒத்த சொல் என்ன?

3) கண்ணன் புல்லாங்குழல் வாசித்தான். இதில் வரும் செயப்படுபொருள் என்ன?

4) தோழர்கள் திடலில் விளையாடினார்கள். இதில் வரும் எழுவாய் என்ன?

5) கை + ஏடு என்பதை சேர்த்து எழுதுக?

6) வகுப்பறை என்பதை பிரித்து எழுதுக?

7) சிறுவன் என்பதன் எதிர்பாற் சொல் தருக?

8) மாணவி என்பதன் எதிர்பாற் சொல் தருக?

(8x1 = 8 புள்ளிகள்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் ஒரு தலைப்பை தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது கட்டுரை எழுதுக.**

1) காலைக் காட்சி
2) தந்தையர் தினம்
3) ஒரு தமிழ்க் கலாசார உணவு தயாரிக்கும் முறை
4) தீபாவளிப் பண்டிகை
5) கொரோனா வைரஸ் பாதிப்பும் பாதுகாப்பும்